BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்கு

# புதிய மருத்துவமனை விரிவாக்கம் மற்றும் உயர்நிலைக் கல்வி வழி உடல் ஆரோக்கியப் பராமரிப்பு வாய்ப்புக்களுக்கான நிதி பெறும் ஏற்பாட்டினை 2021 ஆம் ஆண்டிற்கான மாகாண பட்ஜெட்டில் (வரவு செலவு திட்டத்தில்) ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் உறுதி செய்து கொண்டுவிட்டது

ப்ராம்ப்ட்டன், ON (March 24, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது இன்று மாகாண அரசு அறிவித்த வரவு செலவு திட்டத்தை வரவேற்கிறது; இதில் வில்லியம் ஆஸ்லர் சுகாதார கட்டமைப்பினுடைய பீல் நினைவு மையத்தின் (William Osler Health System's Peel Memorial Centre) புதிய பிரிவிற்கான விரிவாக்கத்திற்கு, மாகாண அரசிடமிருந்து நிதி கிடைக்கிறது; இதன் படி, ரையர்ஸன் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து ப்ராம்ப்ட்டன் நகரில் மருத்துவக் கல்விக்கான புதிய ஒரு கல்வி நிறுவனத்தை ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நலவாழ்வுக்காகவும் அதற்கான நிதிரீதியான ஆதரவு அளிக்கவும் உதவுகிறது.

**பீல் நினைவு மைய மருத்துவமனையின் விரிவாக்கம்**

மாகாணத்தின் இந்த வரவு செலவு திட்டமானது வில்லியம் ஆஸ்லர் சுகாதார கட்டமைப்பினுடைய பீல் நினைவு மையத்தின், புது நோயாளிகளுக்கான பிரிவினை உருவாக்குவதில் ஆதரவளிக்கும். பீல் இரண்டாம் கட்டத்தை (Peel Phase II) நிஜத்தில் கொண்டு வருவது என்பது ப்ராம்ப்ட்டன் சிவிக் மருத்துவமனையின் சில தீவிர பராமரிப்பு சேவைகளை அதிகரிப்பதில் ஆஸ்லர் மையத்திற்கு உதவும்; இதன்மூலம், இந்த திட்டப்பணி முடியும்போது மருத்துவமனை படுக்கைகளின் கொள்திறன் எண்ணிக்கை 90 – 100 என அதிகரிக்கும்.

பீல் மெமோரியலில் உள்ள அவசர சிகிச்சை மையத்தை 24/7 எனும் வகையிலான நடவடிக்கைகளுக்கு உகந்த வகையில் விரிவாக்க வேண்டி ஆஸ்லர் முன்மொழிவு செய்தது; இதனை நிறைவேற்றுவதற்கான ஒப்புதலை கோருகிறது; இது சமூகத்திற்கான கொள்திறனை அதிகரிக்கும். அவசரப் பராமரிப்பு மையத்தை, அவசரநிலை துறை என்று மறுபெயரிடுதலும் இதில் அடங்கும்; இது பீல் இரண்டாம் கட்டத்தை (Peel Phase II) முடிப்பதற்கு முன்பாகவே மேற்கொள்ளப்படலாம்.

ஜனவரி 22, 2020 அன்று, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒரு சுகாதார அவசரநிலையை அறிவித்து அதற்கென வாதாடுகின்ற வகையில் "ப்ராம்ப்ட்டனுக்கான நியாயமான பேர ஒப்பந்தம்" எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியது; ப்ராம்ப்ட்டன் நகரின் சுகாதாரப் பாதுகாப்புக்கான நிதி இடைவெளியைக் குறைக்க, மாகாண அரசிடமிருந்து கூடுதல் நிதி கோருதல் இதில் அடங்கும்; பீல் மெமோரியலின் இரண்டாம் கட்டத்தை (24/7 எனும் முறையிலான அவசர சிகிச்சை துறை மற்றும் கூடுதல் படுக்கைகள்)

பூர்த்தி செய்வது மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரில்  மூன்றாவது சுகாதார வசதிக்கான கட்டிடமும் இதில் அடங்கும்.

**உயர்நிலைப் பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலையிலான புதிய கல்வி வாய்ப்புகள் மற்றும் திறன்களுக்கு பயிற்சியளிக்கும் வாய்ப்புகள்**

நகர நிர்வாகமானது, ரையர்சன் பல்கலைக்கழகத்தில் ஒரு மருத்துவக் கல்வி நிறுவனம் உட்பட உயர்நிலைப்பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலையிலான கல்விக்கான வாய்ப்புகளை விரிவாக்குவதை வரவேற்கிறது. இந்த அறிவிப்பும், பீல் மெமோரியலின் விரிவாக்கமும், ப்ராம்ப்ட்டனில் உள்ள சுகாதாரப் பராமரிப்பு அவசரநிலைக்கு தீர்வு காண உதவுகிறது; மேலும் அடுத்த தலைமுறை சுகாதாரப் பயிற்சியாளர்கள், நகரத்திற்கு உள்ளேயே, உள்ளூரிலேயே, பயிற்சி பெற முடியும் என்பதையும் உறுதி செய்கிறது.

மாகாண அரசின் இன்றைய அறிவிப்பானது, ப்ராம்ப்ட்டன் பல்கலைக்கழகம் பற்றிய  நகர கவுன்சிலின் தேடுதலை ஈடுசெய்கிறது என்பதுடன் ப்ராம்ப்ட்டன் நகருக்குள் முழுமையான ஒரு பல்கலைக்கழகத்தைக் கொண்டுவருவதற்கான பணிகளையும் முடித்து வைக்கும்.

**புதிய பள்ளி மற்றும் குழந்தைப் பராமரிப்பகங்கள்**

மாகாண பட்ஜெட் ஆனது, ப்ராம்ப்ட்டன் நகரில் புதிய ஒரு ஆங்கில ஆரம்ப பாடசாலைக்கும் வழி வகுக்கிறது; இது 850 மாணாக்கர்களுக்கு சேவையாற்றும் என்பதுடன், உரிமம் பெற்ற  73 குழந்தைப் பராமரிப்பகங்களைக் கொண்ட ஒரு ஒரு குழந்தைப் பராமரிப்பு மையத்தையும் கொண்டிருக்கும்.

**பட்ஜெட் –க்காக வாதாடுதல்**

பிப்ரவரி மாதத்தில் ப்ராம்ப்ட்டன் நகரம்  2021 ஆண்டிற்கான முறையான பட்ஜெட் –ஐ சமர்ப்பித்தது; இதில் முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயங்கள் உள்ளன, இவை உள்பட : சுகாதாரப் பராமரிப்பு, பேருந்து போக்குவரத்து, உள்கட்டமைப்பு மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலையிலான புதிய கல்வி வாய்ப்புகள் .

இன்றைய வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்னர், COVID-19 தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட நிதி பாதிப்புகளை நிவர்த்தி செய்வதிலும்,  நகராட்சி பேருந்து போக்குவரத்து முறைகளை ஆதரிப்பதற்காகவும் கூடுதல் நிதியாக  $15 மில்லியன் தொகை அறிவிக்கப்பட்டதை நகர நிர்வாகம் வரவேற்கிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரைக்குமான  'பாதுகாப்பான மறுதொடக்கம் செய்தல்' பற்றிய ஒப்பந்தத்தின் மூலமாக அதிகரிக்கப்பட்ட  நிதியானது,  ஒரு நேர்மறையான வளர்ச்சிக்கான செயலாகும்; இதைத்தான்  நகரத்தின் 2021 பட்ஜெட் சமர்ப்பித்ததன் மூலம் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வாதிட்டு கேட்டது. தற்போதைய COVID-19 இயக்க செலவுகளை நிவர்த்தி செய்ய $ 500M தொகை வழங்க  உதவுவதில் ஒரு பகுதியாக, தற்போது $14.6 மில்லியனைப் பெற்றது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“COVID-19 தொற்றுபரவல் காரணமாக ப்ராம்ப்ட்டன் நகரை மீட்சிக்கு கொண்டு வருவதில், எங்கள் மாகாண கூட்டாளர்களிடமிருந்து நிதியுதவி கிடைப்பது முக்கியமான விஷயமாகும்; மேலும் பீல் மெமோரியலின் இரண்டாம் கட்டத்தின் மூலம் ப்ராம்ப்ட்டனில் இரண்டாவது மருத்துவமனை பற்றி இன்று அறிவித்தமைக்கும், ப்ராம்ப்ட்டன் டவுண்டவுன் -இல் ஒரு புதிய மருத்துவக் கல்வி நிறுவனத்தைக் உருவாக்க முன்வந்தமைக்கும் நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். COVID-19 தொற்று பரவலானது சரியான நேரத்திலான மற்றும் சமமான வாய்ப்பும் கொண்ட சுகாதாரப் பராமரிப்புக்கான நிதி பெற வேண்டிய முக்கியமான தேவையை தீவிரப்படுத்தியுள்ளது. ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கனடாவின் மிகவேகமாக வளர்ந்து வருவதும், இளைய நகரங்களில் ஒன்றுமாக இருந்தபடி, எங்கள் இளைஞர்களுக்கான உயர்நிலைப் பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலையிலான புதிய கல்வி வாய்ப்புகளை விரிவாக்குவது, மற்றும் சுகாதார நிதி பெறுவதில் இருக்கும் இடைவெளியை நிவர்த்தி செய்வது, ஆகியவையே முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயங்களாகும். பீல் மெமோரியல் மருத்துவமனையின் இரண்டாம் கட்டம் மற்றும் புதிய மருத்துவப் பள்ளி மூலம் உயர்நிலைப் பள்ளிக்கல்விக்கு அடுத்த நிலையிலான புதிய கல்வி வாய்ப்புகளை வழங்குதல் பற்றிய இந்த அறிவிப்பினை பெறுவதற்காக, நகர சபையினர் தங்கள் வாதத்தை எடுத்து வைப்பதில் தீவிரமாக முன்னேற்றம் செய்துள்ளனர். உடல்நலம் மற்றும் நல்வாழ்வு மற்றும் ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கான கல்வி வாய்ப்புகள் நிகழ்நிலையில் நிஜமாவதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இது ஆஸ்லருக்கும் எங்கள் சமூகத்துக்கும் வரவேற்கத்தக்க ஒரு செய்தியாகும்; மேலும் ப்ராம்ப்ட்டனில் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மருத்துவமனை விரிவாக்கத்தை முன்னுரிமை கொண்ட விஷயமாக மாற்றியமைத்த தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் அலுவலர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் பிற ஆதரவாளர்களுடன் சேர்ந்து, ஒன்ட்டேரியோ அரசாங்கத்திற்கு நன்றி கூறிக்கொள்கிறோம். நமது பீல் மெமோரியல் மைய விரிவாக்கத்திற்கான தொடர்ச்சியான திட்டமிடலானது, வேகமாக வளர்ந்து வரும் பிராந்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கூடுதல் மருத்துவமனை திறனை உருவாக்குவதன் மூலம் முன்னேறுவதில் எங்களுக்கு உதவும்; மேலும் ஒருங்கிணைந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்காக ஆஸ்லர்’ஸ் பீல் நினைவு மையத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகின்ற தனித்துவமான கவனிப்புக்கு ஈடு செய்யும் விதமாகவும் இருக்கும்.”

- *டாக்டர். நவீத் மொஹம்மத், தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, வில்லியம் ஆஸ்லர் சுகாதார கட்டமைப்பு*

“ஒன்ட்டேரியோ வரவுசெலவுத் திட்டத்தில் ப்ராம்ப்ட்டனில் ஒரு புதிய மருத்துவக் கல்வி நிறுவனத்தை உருவாக்குவதற்கும் ப்ராம்ப்ட்டனின் உள்ளூர் சுகாதாரப் பராமரிப்பு கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கும் உறுதியளிக்கிற வகையிலான இன்றைய அறிவிப்பில் ரையர்ஸன் பல்கலைக்கழகத்தினர் உற்சாகமாக இருக்கிறார்கள். நமது உயர்நிலைப் பள்ளிக்கல்விக்கு அடுத்த

நிலையிலான புதிய கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பது தொடர்பாக, நகரத்துடன் இணைந்து பணியாற்ற நாங்கள் எதிர்நோக்கி காத்திருக்கிறோம்."

- *டாக்டர் மொஹம்மத் லச்சேமி, தலைவர், மற்றும் துணை வேந்தர், ரையர்ஸன் பல்கலைக்கழகம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
குர்வீந்தர் சிங்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-2028 | Gurvinder.A.Singh@brampton.ca